ஊடக அறிவித்தல் 15

# தேர்தல் ஆணைக்குழு

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2020.04.25

## அரசியல் கட்சிகள் / சுயேச்சைக் குழுக்கள் சார்பாக போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்காகச் செய்யப்படுகின்ற அறிவித்தல்

- போட்டியிடுகின்ற ஏதேனும் அரசியற் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் பேணப்பட்டு வருகின்ற தேர்தல் பிரச்சார அலுவலகங்கள், வேறு கட்சிகளுக்கான அல்லது வேறு கட்சியொன்றின் வேட்பாளர்களுக்கான பிரச்சார அலுவல்களுக்காகப் பயன்படுத்தப்பட முடியாது. அதாவது ஏதேனும் கட்சியொன்றின் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் தேர்தல் பிரச்சார அலுவலகங்களில் வேறு கட்சிகளின் தேர்தல் சின்னங்கள், வேறு கட்சிகளின் வேட்பாளர்களின் பெயர்கள், உருவப் படங்கள், விருப்பு இலக்கங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட முடியாது.

- ஏதேனும் கட்சியொன்றிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவொன்றிலிருந்து போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு வேறு கட்சியொன்றின் அல்லது குழுவொன்றின் வாக்கெடுப்பு நிலைய முகவர்களாக / வாக்கெண்ணல் முகவர்களாகச் செயற்பட முடியாது.

- ஏதேனும் கட்சியொன்றிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவொன்றிலிருந்து போட்டியிடுகின்ற வேட்பாளரொருவருக்கு வேறு கட்சியொன்றை ஊக்குவிப்பதற்கு அல்லது தனது கட்சியை / குழுவைச் சாராத வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்குப் பிரச்சார அலுவல்களை மேற்கொள்வதற்கு, ஊடக அறிவித்தல்களை வெளியிடுவதற்கு, அறிவித்தல்களைப் பிரசுரிப்பதற்கு முடியாது.

- பெற்றுக்கொண்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கை போதாமை காரணமாக ஏதேனும் கட்சியொன்றுக்கு அல்லது குழுவொன்றுக்கு உறுப்பினர் பதவிகள் கிடைக்கவில்லையெனில், அக்கட்சியின் அல்லது குழுவின் விருப்புகள் எண்ணப்பட்டதன் பின்னர், அக்கட்சியின் / குழுவின் முகவர்கள் வாக்கெண்ணல் மண்டபங்களிலிருந்து வெளியேற்றப்படுவதால், வேறு கட்சிகளின் விருப்பெண்ணலைக் கண்காணிப்பதற்கு அவ்வாறான குறைந்த எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் உண்மையாகவே போட்டியிடாத கட்சிகளின் / குழுக்களின் முகவர்களுக்கு சந்தர்ப்பமொன்று கிடைக்கமாட்டாது.

- **ஆதலால், உண்மையாகவே போட்டியிடுகின்ற எதிர்பார்ப்பின்றி அதாவது வேறு அரசியற் கட்சிகளுக்கு அல்லது வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக அரசியற் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களூடாக வேட்புமனுக் கையளிப்பதன் மூலம் எதிர்பார்த்தவாறு வேறு கட்சியொன்றுக்கு அல்லது வேறு கட்சி வேட்பாளரொருவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு எவ்வித சாத்தியமொன்றும் கிடைக்கமாட்டாதென அவ்வாறு ஆதரவு வழங்கும் எதிர்பார்ப்போடு மாத்திரம் போட்டியிடுவதற்கு தயாராகவுள்ள அனைத்து தரப்பினருக்கும் தயவன்புடன் வலியுறுத்தப்படுகின்றது.**

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
தேர்தல் ஆணைக்குழு சார்பாக

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020.03.14